**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 371/2025 |
| Name | : Balanandhini |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **26.03.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மடத்துக்குளத்தில் வசிக்கிறேன். கிருஷ்ணாபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சத்துணவு அமைப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். பொதுவாக மாவணவர்களுக்கு சத்துணவு சமைப்பதற்காக அரிசி, பருப்பு, எண்ணெய் மற்றும் மளிகை பொருட்கள், சமையல் பாத்திரங்கள் மற்றும் எரிவாயு சிலிண்டர் மற்றும் அடுப்பு இருக்கும். 20.08.2025 ம் தேதி மதியம் சத்துணவு வழங்கிய பின்பு கூடத்தை பூட்டி சென்றுவிட்டேன். 21.08.2025 அன்று காலை 06.30 மணிக்கு காலை உணவு சமைப்பதற்காக மஞ்சுளா தேவி என்ற காலை சிற்றுண்டி பொறுப்பாளர் வந்து பார்த்த போது சமையல் கூடத்தில் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. அவர் திறந்து பார்த்த போது எரிவாயு சிலிண்டர்கள் – 1, அரிசி – 2 மூட்டை, 40 கிலோ பருப்பு, 55 லிட்டர் எண்ணெய், பாசிப்பயிறு 10 கிலோ, சுண்டல் 10 கிலோ, காலை சிற்றுண்டி சமைப்பதற்காக வைக்கப்பட்டிருந்த வெள்ளை மற்றும் கோதுமை ரவை தலா 12 கிலோ, பாசிப் பருப்பு – 3 கிலோ, முட்டை மற்றும் stainless steel

டிரம், ரெக்கார்டு நோட் –1 ஆகியவை காணாமல் போயிருந்தது. அவர் தலைமை ஆசிரியர் மற்றும் எனக்கு தகவல் சொன்னார். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் 21.08.2025 ம் தேதி நான் எழுத்து மூலமான புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில்ல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சுமார் 4 நாட்கள் கழித்து வழக்கு சம்மந்தமாக ஒரு நபரை கைது செய்து அவரிடம் இருந்து இரண்டு சிலிண்டர்கள் மற்றும் ஒரு அரிசி மூட்டை கைப்பற்றப்பட்டதாக சொன்னார்கள். நீதிமன்றத்தில் மனு செய்து நான் பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இரண்டு சிலிண்டர்கள் தான் காணாமல் போனவை ஆகும். **சிலிண்டர்கள் உள்ள புகைப்படம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள அரிசி மூட்டை தான் காணாமல் போனவை ஆகும். **அரிசி மூட்டை உள்ள புகைப்படம் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய எதிரி வழக்கறிஞர் ஆஜரில்லை என்பதால் நீதிமன்றத்தால் amicus curiae திரு.R.மகேஸ்வரன், Ms.No.2060/2009 நியமிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.**

(1) சமையல் கூடத்தின் சாவி என்னிடம் ஒன்றும், மஞ்சுளா தேவி என்பவரிடம் ஒன்றும் இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் மஞ்சுளா தேவி சமையல் கூடத்திற்கு உள்ளே சென்று பார்த்துவிட்டு எனக்கு தகவல் சொன்னார். தகவல் கிடைத்த கால் மணி நேரத்திற்குள் நான் சமையல் கூடத்திற்கு சென்றேன். போலீசார் நான் வருவதற்கு முன்பே அங்கு வந்திருந்தார்கள். 3 போலீசார் வந்திருந்தார்கள். புகாரை நான் கைப்பட எழுதிக் கொடுத்தேன். அதில் உள்ள வாசகங்களை போலீசார் சொல்லி கொடுத்தார்களா என்றால் இல்லை நானாக எழுதினேன்.

(2) எதிரிக்கும், காணாமல் போன பொருட்களுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் எதிரியை பார்க்கவில்லை. பொருட்களின் அளவு மிகைப்படுத்தி புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. புகார் கொடுத்த அன்று போலீசார் என்னை விசாரித்தார்கள் அதன் பின்பு விசாரிக்கவில்லை. நான் பொருட்கள் இல்லாததால் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த

வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.03.26 19:07:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 371/2025 |
| Name | : Manjuladevi |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **26.03.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் சாளரப்பட்டியில் வசிக்கிறேன். கிருஷ்ணாபுரம் அரசு நடுநிலைப் பள்ளியில் காலை உணவு பொறுப்பாளராக வேலை செய்கிறேன். வழக்கமாக நான் காலை 06.30 மணிக்கு காலை உணவு தயாரிக்க செல்வேன். கடந்த 21.08.2025 ம் தேதி வழக்கம் போல் காலை 06.30 மணிக்கு சென்ற போது சமையல் கூடத்தின் பூட்டு உடைந்திருந்தது. தலைமை ஆசிரியல் மற்றும் சத்துணவு அமைப்பாளர் பாலநந்தினிக்கு தகவல் கொடுத்தேன். உள்ளே சென்று பார்த்த போது சிலிண்டர்கள் – 4 மற்றும் உணவு சம்மந்தப்பட்ட பொருட்கள் எதுவும் இல்லாமல் இருந்தது. சத்துணவு அமைப்பாளர் இது சம்மந்தமாக போலீஸில் புகார் கொடுத்தார். மாணவர்களுக்கு வேறு பொருட்களை வாங்கி வந்து சத்துணவு சமைத்து கொடுக்கப்பட்டது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய எதிரி வழக்கறிஞர் ஆஜரில்லை என்பதால் நீதிமன்றத்தால் amicus curiae திரு.R.மகேஸ்வரன், Ms.No.2060/2009 நியமிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.**

(1) காலை உணவு பொறுப்பாளர் என்பது அரசு பணி. என்னுடன் சேர்த்து மொத்தம் 3 சத்துணவு பணியாளர்கள் உள்ளோம். மற்ற சத்துணவு பணியாளர்களிடம் சாவி இல்லை. நான் பூட்டு உடைந்து இருப்பதை பற்றி தலைமை ஆசிரியருக்கு தகவல் சொன்னேன். உள்ளே சென்று பார்த்து என்ன பொருட்கள் காணவில்லை என்று மீண்டும் தகவல் சொன்னேன். இரண்டாவது முறையாக தலைமை ஆசிரியரிடம் தகவல் சொன்ன போது போலீசார் அங்கு வந்துவிட்டார்கள். தலைமை ஆசிரியருக்கு பூட்டு உடைந்தது சம்மந்தமாக தகவல் சொன்ன பின்பு சத்துணவு அமைப்பாளருக்கு சொன்னேன். சத்துணவு அமைப்பாளருக்கு என்ன பொருட்கள் காணவில்லை என்று சொன்னேனா என்றால் எல்லா பொருட்களும் காணாமல் போய் விட்டதாக சொன்னேன்.

(2) போலீசாருக்கு யார் தகவல் சொன்னார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் சுமார் ¼ மணி நேரத்தில் அங்கு வந்தார்கள். மற்ற சமையல் பணியாளர்கள் சிறிது நேரம் கழித்து வந்தார்கள். அவர்களிடம் வேறு சாவிகள் எதுவும் உள்ளதா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சிலிண்டரை யார் எடுத்துச் சென்றார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.03.26 19:08:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்